[illegible] விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்களின் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 09 ( 23 - 05 - 1991 ) வியாழக்கிழமை ஓசை: 94

## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை இடம்பெறும்

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர்களை தெரிவு செய்ய பரீட்சைகள் நடாத்தப்படும் என கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஆங்கில ஆசிரியர்களை தெரிவு செய்யும் பொருட்டு கல்விச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது. யூலை மாசம் நடுப்பகுதியில் இதற்கென நடைபெற இருக்கும் போட்டிப் (4 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் புதிய தலைவராக சோனியா காந்தி தெரிவு

(டில்லி)

இந்திரா காங்கிரஸ் புதிய கட்சித் தலைவராக மறைந்த ராஜீவ் காந்தியின் மனைவி திருமதி சோனியா காந்தி ஏகமனதாக காங்கிரஸ் கட்சி செயற்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் பி. வி. நரசிம்மராவின் தலைமையில் நேற்று இடம்பெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் திருமதி சோனியா காந்தியை தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது என கட்சியின உத்தியோகபூர்வ பேச்சாளரான பிரணாப் முகர்ஜி புதுடில்லியில் நேற்றுமாலை அறிவித்துள்ளார்.

கட்சித் தலைவராக திருமதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தேர்தல் பிற்போடப்பட்டது

(டில்லி)

ராஜீவ் காந்தியின் மரணத்தையடுத்து இன்றும் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற இருந்த இரண்டாம், மூன்றாம் கட்ட தேர்தல் வாக்குப் பதிவுகள் அடுத்த மாதம் மத்திவரை ஒத்திப்போடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

114 மக்கள் அவைத் தொகுதிகளிலும், கேரள மாநில சட்டப் பேரவைத் தொகுதிகளிலும் இன்று நடக்க இருந்த வாக்குப் திவு அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கும், தமிழகம் உள்ளிட்ட ஏழு மாநிலங்களிலும புதுச்சேரி மத்திய ஆளுகை பிரதேசத்திலும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த வாக்குப் பதிவு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி. என். சேஷன் தெரிவித்தார்.

ஆறு மாநிலங்களில் இன்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## தீன்மூர்த்தி பவனில் அஞ்சலிக்கு

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சிறீபெரும்புதூர் சம்பவத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது பூதவுடல் சென்னை பொது மருத்துவமனைக்கு முதலில் எடுத்து வரப்பட்டது.

அங்கிருந்து அம்புலன்ஸ் வாகனம் மூலம் சென்னை விமான நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டது அங்கு விசேட விமானப்படை விமானத்தில் புதுடில்லியிலிருந்து வந்திருந்த ராஜீவ் காந்தியின் மனைவி சோனியாகாந்தியும் மகள் செல்வி பிரியங்காவும் பூதவுடலைப் பொறுப்பேற்று புதுடில்லிக்கு எடுத்துச் சென்றனர் அவர்களுடன் ஆந்திரப்பிரதேசமுதல்வர் சென்னா ரெட்டியும் உடன் சென்றிருந்தார்

புதுடில்லி விமானநிலையத்தில் வெங்கட்ராமனும் துணை ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மாவும் ராஜீவின் பூதவுடலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளியன்று தகனம்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் பூதவுடல் வெள்ளியன்று தகனம் செய்யப்படும். அவரது அன்னையார் இந்திரா காந்தி தகனம் செய்த இடத்திலேயே ராஜீவ் காந்தியின் தகனமும் இடம்பெறும். இத் தகவலைத் தேசிய செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

புதுடில்லியிலுள்ள ஜமுனா நதிக் கரையில் அமைந்துள்ள சக்தித் தள் மயானத்தில் வெள்ளி பிற்பகல் நான்கு மணிக்கு மரணச் சடங்குகள் இடம்பெறும் என்று காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இந்தியாவில் பரவலான வன்முறை

(சென்னை)

சிறீபெரும்புதூரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் முன்னாள் பிரதமர் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் பெரும் வன்முறைச் சம்பவங்கள் வெடித்துள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்கும் முகமாக பஸ்களுக்கும், கார்களுக்கும், கடைகளுக்கும் தீவைப்பதில் ஈடுபட்டுள்ளனர் தமிழ் நாட்டில் மட்டும் நூற்றுக்கணக்கான பஸ்கள் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. ஆந்திரப்பிரதேசத்தின் ஹைதராபாத் விஜயவாடா, நகரங்களில ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் உள்ளது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த இரண்டு சம்பவத்தில் இருவர் மாண்டுபோயுள்ளனர்.

ஆந்திரா மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் தெலுங்குதேசக் கட்சித் தலைவர் என். ரி. ராமராவின் இரண்டு தியேட்டர்களுக்கு தீ வைத்ததாகவும் செய்திகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவின் மரணத்துடன் புலிகளுக்குத் தொடர்பு

### சுபோத்கான்சகாய்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் மரணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தப்படலாம் எனத் தோன்றுகிறது என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் சுபோதகான் சகாய் தெரிவித்துள்ளார்.

நேற்று ராய்ட்டர் செய்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச்சாட்டை புலிகள் நிராகரிப்பு

(லண்டன்)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட சிறீபெரும்புதூர் வெடிகுண்டு சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தும் செய்திகளை விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் நிராகரித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்துள்ள செய்தியில் இந்தக் குண்டு வெடிப்புக்கும், தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளது.

## நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வழி புலனற்றோர் சங்க அங்கத்தவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்படவுள்ளன. மேற்படி அங்கத்தவர்களுக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவுடன் மேலும் பதினைந்துபேர் மரணம்

(டில்லி)

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில்பதினைந்து பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தசிலரின் விபரம் வருமாறு:

சென்னை - செங்கை அண்ணா மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு முகமட் இக்பால், காஞ்சிபுரம் காவல் துறை ஆய்வாளர் திரு. ராஜகுரு, காவல்துறை ஆய்வாளர் திரு எட்வேர்ட் ஜோசப், திரு ராஜீவ் காந்தியின் மெய்ப்பாதுகாவலர் திரு. குப்தா. படுகாயமடைந்தவர்களில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முதலில் சென்று பார்த்தவர் மைத்துனி மேனகா காந்தி

ராஜீவ் காந்தியின் உடல் புதுடில்லியிலுள்ள அனைத்து இந்திய விஞ்ஞானக்கழகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவரை முதல் முதலாகச் சென்று பார்த்தவர் ராஜீவ் காந்தியின் தம்பியான காலஞ்சென்ற சஞ்சய் காந்தியின் மனைவி மேனகா காந்தியாகும்.

இந்தக் கொலை நாட்டிற்கே ஒரு பெரிய துயர நிகழ்ச்சி என்பதுடன் தனக்குச் சொந்த முறையில் பெரிய சோக நிகழ்ச்சியாகும் என்று மேனகா காந்தி கூறினார்.

## ராஜீவின் இறுதிச் சடங்கில் பல உலகத் தலைவர்கள்

வெள்ளியன்று நடைபெற இருக்கும் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காகப் பல தலைவர்கள் புதுடில்லி வரவுள்ளனர். பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், அமெரிக்க உபஜனாதிபதி, நிக்கரகுவா முன்னாள் அதிபர் டானியல் ஒட்டேகா ஆகியோர் அவர்களில சிலராவர்.

## கட்டுப்படுத்த முடியாவிடில் இராணுவத்தைஅழைக்கவும்

தமிழகத்தில் சட்டம், ஒழுங்கைப் பேணவும், வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும், மாநில அரசுக்கு இயலாமல் இருக்குமானல் மாநில அரசு இராணுவத்தை அழைக்க வேண்டும் என திமுக தலைவர் மு கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இந்திய இராணுவத்தின் 10 000 பேரைக் (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ காவலரண்கள் புலிகளால் தாக்கி அழிப்பு

(வவுனியா)

தந்திரிமலையில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமின் மூன்று காவல அரண்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில், இம்முகாமில் இருந்து சுமார் 500 யார் தொலைவில் அமைந்திருந்த இராணுவத்தினரது பலம் வாய்ந்த மூன்று காவல் அரண்கள்மீதும் விடுதலைப்புலிகள் சமகாலத்தில் கடும் தாக்குதலைத் தொடுத்தனர் புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து இக்காவல் அரண்களில் இருந்த இராணுவத்தினர் முகாமை நோக்கி ஓடித்தப்பி விட்டனர் இவர்களின் மேற்படி மூன்று காவல் அரண்களையும விடுதலைப்புலிகள் கைப்பற்றி நிர்மூலமாக்கியுள்ளனர்.

## வீரவணக்கம்

### கிரிதரன்

(யாழ்ப்பாணம்)

தச்சன்காட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின்போது கிரிதரன் (முத்துலிங்கம் கேதீஸ்வரன் விநாயகர் வீதி நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## 6ஆம் மாத நினைவஞ்சலி



தாயக மண்ணில்:
29 - 06 - 72

மண்மீட்பில்:
23 - 11 - 90

### வீரவேங்கை நியூட்டன்

(செல்வன் கு. ஜெயரட்ணம்) (சுரேஸ்)

மாங்குள மண்மீட்க மாவீரர் நாளிலே அண்ணன் போர்க்கூடன் சென்றாய்! மண்ணை மீட்டு விட்டு விண்ணிற்குச் சென்றாயோ?

உன் ஆத்மா சாந்தி அடைய அன்னை வேளாங்கண்ணியை பிரார்த்திக்கின்றோம்.

ஐயா, அம்மா, அண்ணன், அக்கா, மருமகள் டிலானி, மாமன்மார், மாமிமார், சித்தி, அப்பு, அம்மம்மா;

இல. 178,
இந்திரஜித்து வீதி,
சந்தையடி வட்டக்கச்சி.

(R/1371)

## பனைவள ஆய்வரங்கும் கண்காட்சியும்

மேற்படி நிகழ்வு ஒன்றை யாழ். விஞ்ஞான மன்றமும் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியமும் இணைந்து யாழ். பல்கலைக் கழகத்தில் நடாத்தவுள்ளது.

இக் கண்காட்சியில் வைக்கப்படும் பொருள்களில் நவீன கண்ணோட்டத்துடன் கூடிய கீழ் வரும் வகையில் மூன்று பொருள்களுக்கு தலா ரூ. 1000/- பெறுமதியான பரிசு வழங்கப்படவுள்ளது.

1. பனம் உணவுப்பொருள்
2. பனம் கைப்பணிப் பொருள்
3. பனை வள அபிவிருத்தியுடன் தொடர்புள்ள புதிய கண்டுபிடிப்புஒன்று

இப் பொருள்களை கண்காட்சிக்கு வைக்க விரும்புவோர் அருகாமையில் உள்ள தெங்கு பனம் பொ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொண்டு 5-6- 1991க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

இ சிவநேசன்
பொது முகாமையாளர்

(B/2559)

## இரண்டாம் கட்ட விசேட நிவாரணம்

வேலணை ப. நோ. கூ. சங்கம் இடம்பெயர்ந்தவர்களுக்கான இரண்டாம் கட்ட விசேட உலர் உணவுநிவாரணம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது தற்காலிக கிளைகளில் வைத்து இன்று (23 05. 91) முதல் வழங்கப்படும் என்று சங்கப் பொது முகாமையாளர் வே. செல்லத்துரை அவர்கள் தெரிவித்துள்ளார். (88)

## பதவி வெற்றிடங்கள்

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் பல விரிவுரையாளர்களுக்குரிய பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாக உள்ளன.

சிறிலங்கா இராணுவத்தினரதும, சிங்கள முஸ்லிம் ஊர்காவற்படைகளினதும் தாக்குதல்களுக்கு அஞ்சி இப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய பல விரிவுரையாளர்கள் இடமாற்றம் பெற்று அல்லது வேலையைவிட்டு வெளியிடங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டனர். இதனால் ஏற்பட்ட மேற்படி வெற்றிடங்கள் கடந்த பல மாதங்களாக நிரப்பப்படவில்லை. இதனால் இப் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (க)

## முதலாம் திகதி முதல்'சாளரம்'

சாளரம் என்னும் புதிய மாத இதழ் ஒன்று ஜூன் முதலாம் திகதி முதல் வெளிவரவுள்ளது. இளையோருக்கான இதழாக வெளிவரவுள்ள சாளரம் யாழ்ப்பாண நூல் நிலையம் சிறிலங்கா பொலிசாரால் தீக்கிரையாக்கப்பட்ட பத்தாவது ஆண்டின் நினைவு நாளில் தனது வெளியீட்டை ஆரம்பிக்கிறது. சமூகத்தில் நடைபெறும் அரசியல், இராணுவ, பொருளாதார, கலாசார விடயங்களில் சாளரம் பங்காற்றும் என 'சாளரம்' வெளியீடு பற்றிய அறிமுகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆறாம் மாத நினைவஞ்சலி



மாங்குள இராணுவ முகாம் நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### 2ஆம் லெப். மாரியாச்சி (சிந்தனா குணசிங்கம்)

தாயக மடியில்: 09-02-1963

தாயக மீட்பில்: 23-11-1990

அன்னை தந்தை அன்பைப் பெற்றவள்
அடிமை விலங்கை சுமக்க மறுத்தவள்
விடுதலை காண துடித்தே எழுந்தவள்
மாங்குளம் தனையே நோக்கி நகர்ந்தவள்
மான் என துள்ளியே திரிந்தவள் — தமிழ்
மண்ணுக்காய் தன்னையே ஈந்தவள்!

— பெற்றோர்கள், சகோதரர்கள்

(B-2564)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தருமலிங்கம் செல்லப்பா

(இளைப்பாறிய நெசவு ஆசிரியர்)

தோற்றம் : 12 - 06 - 1922

மறைவு : 23 - 04 - 1991

திதி : 23 - 05 - 1991

அன்பின் அருவியாய், அறிவின் ஒளிவிளக்காய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
குன்றின் ஒளியாய் குடும்பத்தின் குலவிளக்காய்
விளங்கிய எங்கள் அன்புத் தெய்வத்தின்
நினைவலைகள் என்றும் எம் நெஞ்சத்தை விட்டகலா

செட்டிய குறிச்சி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

(R/1405)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 05 - 23

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்.கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையின் தாகுதலினால் வீரமரணமடைந்த

**நடேஷ்** (வை. கேதீஸன் - புங்குடுதீவு)

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

- **வீரா/சிலன்** (சிவக்கொழுந்து சிவலிங்கம் - மட்டக்களப்பு)
- **கிருபை** (இளையதம்பி கிருபைரத்தினம் - ஆயித்தியமலை)
- **காந்தன்/சந்திரன்** (சதாசிவம் சந்திர மோகன்-நாவற்காடு)

1988ஆம் ஆண்டு நித்திகைக்குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம்லெப்.ஜீவன்** (சுந்தரலிங்கம் ரகுநாதன்- தென்மராட்சி)

1989ஆம் ஆண்டு தேசவிரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட

- **அமிர்தம்** (நடராசா அமிர்தலிங்கம் - மல்லிகைத்தீவு)
- **ஹசாலி** (சேகுமுகமட் சகாப்தீன் - ஆலிம்சேனை, மூதூர்)

இதேயாண்டு இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட

- **கனகராசா** (திருமலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/2530)

### சிந்தனைக்கு

சமாதி ஒவ்வொரு தவறையும் புதைத்து விடுகிறது:
ஆத்திரம் ஒவ்வொன்றையும் அணைத்து விடுகிறது.
குறைபாடு ஒவ்வொன்றையும் மூடிவிடுகிறது

— வாஷிங்டன் இர்விங்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த பெ எண் 05

# சந்தர்ப்பம் உருவாக்கிய இந்தியப் பிரதமர்

"ஆசிய ஜோதி" நேருவின் பேரனும், இந்திரா காந்தியின் மூத்த புதல்வருமான முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னைக்கு நாற்பது மைல் தொலைவிலுள்ள சிறிபெரும் புதூரில் நேற்று முன்தினம் இரவு 10.10 மணியளவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

இந்தியாவின் பத்தாவது பொதுத்தேர்தல் பெரியளவு வன்முறையின் மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

1980 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்த ராஜீவ் காந்தி ஒரு விபத்தின் காரணமாக அரசியலுக்கு வந்தவர். அவரது தம்பியார் சஞ்சய் காந்தி விமான விபத்தில் அகால மரணமடைந்ததைத் தொடர்ந்து அவர் அரசியலில் நேரு குடும்பத்தின் வாரிசாகக் கொண்டு வரப்பட்டார். ஆரம்பத்தில் ராஜீவ் காந்தி அரசியலில் பெரும் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் விமான ஓட்டியாக தனது வாழ்க்கையை அமைதியாக நடத்தி வந்த ராஜீவ் காந்தியின் பிரவேசமும் ஒரு 'விபத்து' என்றே சொல்லலாம்.

1984 இல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி சீக்கிய தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்திரா காங்கிரஸின் தலைமையையும், இந்திய பிரதம மந்திரிப் பொறுப்பையும் ராஜீவ் காந்தி ஏற்கவேண்டி வந்தது. அப்பொழுது உலகில் மிக இளைய பிரதமராக ராஜீவ் காந்தி இருந்தார். இப் பிரதமர் பதவி ராஜீவ் காந்தி சந்தித்த இரண்டாவது விபத்தாகும். இவ் விபத்தினால் இவர் வாழ்க்கையில் பல 'விபத்துக்களை' சந்திக்கவும் ஒரு விபத்தில் பலியாகவும் வேண்டி ஏற்பட்டது.

அரசியலில் ஆர்வமில்லாமல் அரசியலுக்கு வந்த ராஜீவ் காந்தியின் செயற்பாடுகள் ஆரம்பத்தில் "மிஸ்டர் கிளீன்" என அவரை அரசியல்வாதிகள், பத்திரிகையாளர் மத்தியில் பேசுமளவில் உயர்த்தியது. ஆனால் இந்திய தேசிய அரசியல் நீரோட்டம் அவரை தொடர்ந்தும் 'கிளீனாக' இருக்கவிடவில்லை. மேலும், தாயாரின் இறப்பினால் ஏற்பட்ட அனுதாப அலைகளினால் 1984 இல் தேர்தலில் இலகுவாக வெற்றியைப் பெற்றுவிட்ட ராஜீவ் காந்தி 1989 இல் தோல்வியைச் சந்தித்து எதிர்க்கட்சி வரிசைக்கு மாறினார்.

பிரதமராகப் பதவி ஏற்ற ராஜீவ் காந்தி இந்திய வெளியுறவுக் கொள்கையில் குறிப்பிடக்கூடிய செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தினார். அமெரிக்கா, சீனாவுடன் அவர் ஏற்படுத்திக் கொண்ட நல்லுறவுகள் அவரது வெளியுறவுக் கொள்கையில் வரவேற்கத்தக்க அம்சமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்ட போது, 1987 இல் சிறிலங்காவுடன் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தமும், நேபாளத்தின் உறவில் ஏற்பட்ட விரிசலும் அவரது வெளியுறவுக் கொள்கைக்குக் கிடைத்த தோல்வி எனத் தெரிவிக்கின்றனர்.

1989 இல் பிரதமர் பதவியில் இருந்து இறங்கிய ராஜீவ் காந்தி சுமார் ஒன்றரை வருடத்திற்குள் மீண்டும் அப்பதவியை அடைவதற்கான சூழ்நிலையை ஓரளவு உருவாக்கியிருந்தார். 1977 ஆம் ஆண்டில் இருந்து இரண்டு வருடங்களில் தாயார் இந்திரா காந்தி ஆட்சி மாற்றத்திற்குச் செய்த ஏற்பாட்டினை ராஜீவ் ஒன்றரை வருடத்திற்குள் செய்ய முயற்சித்தார்.

ஆனால், இவ்வேளையில் ஏற்பட்ட அவரது திடீர் மரணம் இந்திய அரசியலிலும், சர்வதேச அரசியலிலும்- குறிப்பாக தென்ஆசிய அரசியலிலும் தாக்கத்தை விளைவித்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

ராஜீவின் கொலை இந்தியாவைப் பொறுத்து ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியது. நேரு குடும்பத்தின் நேரடி வாரிசு இந்திய அரசியலில் இல்லாது போயினும் சோனியா காந்தி இந்திரா காங்கிரஸின் தலைவியாக நியமிக்கப்பட்டதில் இருந்து நேரு குடும்பத்தின் அரசியல் தொடரப்போகின்றது எனவே சொல்லலாம். இதன் மூலம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் பற்றி எழுந்த சர்ச்சை உடன் தீர்விற்கு வந்துள்ளதெனலாம்.

தென்ஆசியாவைப் பொறுத்து பெரும்பாலான நாடுகள் இந்தியாவின் அடுத்த பிரதமராக ராஜீவ் வருவதை பெரிதும் விரும்பவில்லை. இதற்கு அவரது கடந்த கால சில நடவடிக்கைகளே காரணமாகும். இந்த நிலையில் இவரது திடீர் மரணம் அந்நாடுகளில் பொதுவான சில அரசியல் மாற்றங்களுக்கு இட்டுச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# புனர்வாழ்விற்குக் கிடைத்த 80மில். ரூ. தேவைக்கு போதாது

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்ட புனர்வாழ்வுப் பிரிவினருக்கு புனர்வாழ்வு வேலைகளுக்காக சுமார் எண்பது மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

புனர்வாழ்வுப் பிரிவினர் மேற்படி நிதியைப் பயன்படுத்தி மாவட்டத்தின் பல்வேறு புனர்வாழ்வு வேலைகளை மேற்கொள்ளவுள்ளனர். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் உயர் அதிகாரிகள் கொழும்பில் உள்ள தலைமை அலுவலக அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சு வார்த்தைகளின் போதே மேற்படி நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதி கிடைத்தது.

செயலக புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரிகள் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில மாவட்டத்தின் புனர்வாழ்வு தொடர்பான அனைத்து மதிப்பீட்டு வேலைகளும் பூர்த்தி செய்யப்படவில்லை. அத்துடன் நான்கு வருடங்களுக்கு முன்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கே இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை, மேலும் தற்பொழுதும்கூட தொடர்ந்தும் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் இந்நிலையில் மேற்படி தொகைப் பணம் எந்த அளவுக்குப் போதுமானதாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை என்றனர். (ஈ)

# ராஜீவ் காந்தி பற்றிய சில குறிப்புக்கள்

குடும்ப வாழ்க்கை

★ 1944 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 20 ஆம் திகதி பெரோஸ் காந்திக்கும் இந்திரா காந்திக்கும் மகனாக பம்பாயில் பிறந்தார்.

★ பம்பாயிலுள்ள டிறின்ரி கல்லூரியில் ஆரம்ப கல்வியை முடித்துக்கொண்டு உயர் கல்வியினை லண்டனில் உள்ள கேம்பிறிட்ஜ் இம்பீரியல் பல்கலைக்கழகத்தில் இயந்திரவியற் பொறியியலாளராக கல்வி பயின்று பின்னர் விமான ஓட்டியாக இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனத்தில் கடமை புரிந்தார். பொழுது போக்காக உடைகளுக்கு மாதிரி அமைத்தும் வந்தார்.

★ 1964 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சோனியாவைச் சந்தித்து காதல் கொண்டார். ஆனால் சோனியாவின் தந்தை "ராஜீவ் குடும்பம் பெரும் அரசியல் வாதிகள் என்பதால் உனது குடும்பவாழ்க்கை நிம்மதியாக இருக்க மாட்டாது" எனத் தெரிவித்து மறுத்தார். பின்னர் இந்திரா காந்தி அரசியலுக்கு சஞ்சய் காந்தி இருக்கிறார் ராஜீவ் காந்தியை நான் அரசியலுக்குள் இழுக்க மாட்டேன் என வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து 1966 இல் ராஜீவ் சோனியா திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு ராகுல் என்ற மகனும், பிரியங்கா என்ற மகளும் உள்ளனர்.

அரசியல் வாழ்க்கை

★ 1980 ஆம் ஆண்டு ராஜீவின் தம்பி சஞ்சய்காந்தி விமானவிபத்தில் இறந்துபோக தவிர்க்க முடியாதபடி அரசியலுக்குள் நுழைந்தார்.

★ 1981 இல் அமேதி தொகுதியில் தெரிவானார்.

★ 1984 ஒக்டோபரில் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டதும் காபந்து பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றதுடன் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் பொறுப்பேற்றார்

★ 1985 இல் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்று பிரதமராக வந்தார். 1989 வரை இவர் பிரதமராக இருந்தார்.

இவரது தம்பி சஞ்சய் காந்தியின் மனைவி, மகாத்மா காந்தியின் பேரன் ஆகியோரை தேர்தலில் தோற்கடித்தவர்.

★ 1986 ஒக்டோபர் 2 ஆம் திகதி ராஜீவ்காந்தி மகாத்மா காந்தியின் சமாதியில் அஞ்சலி செலுத்தச் சென்ற போது இடம் பெற்ற கொலை முயற்சி தோற்கடிக்கப்பட்டது.

★ இதே ஆண்டு கனடாவில் சீக்கியர்களால் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியும் தோற்கடிக்கப்பட்டது.

★ 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான போது சிறிலங்கா கடற்படை வீரன் வெத்தமுனியால் மேற் கொள்ளப்பட்ட கொலை முயற்சியும் கை கூடவில்லை.

★ 1989-91 ஆண்டுகளில் எதிர்க் கட்சித் தலைவராகவும் சந்திரசேகர் ஆட்சி அமைக்க ஒத்துழைப்பும் வழங்கினார்.

★ 1991 மே 21 இல் சென்னையில் குண்டு வெடிப்பொன்றில் மரணமானார்.

## ராஜீவின் மறைவு குறித்து

# இந்தியத் தலைவர்களின் கவலையும் கண்டனமும்

★ "இந்தியாவின் கடமைப் பற்று வாய்ந்த துணிச்சல் மிக்கதோர் தவப்புதல்வர் ராஜீவ் காந்தி கோழைத்தனமான செயல் ஒன்றில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார்" என்று இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

★ "இந்தியாவின் அபிவிருத்திக்காக முழு மூச்சுடன் பாடுபட்ட ராஜீவ் காந்தி இந்தியாவின் வருங்காலம் பற்றி சிறப்பான கருத்துக்களைக்கொண்டிருந்தார்" என்று இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

★ "ராஜீவ்காந்தியின் கொலை தமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியை அளித்தது" என்று துணை ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா தெரிவித்துள்ளார். "இந்தியாவில் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பரிமாணங்களையும், பொறுப்பையும் ஒவ்வொரு இந்தியனும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

★ "இந்தியா உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நடைமுறையான பாராளுமன்ற பொதுத் தேர்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இவ் வேளையில் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது பெரும் அதிர்ச்சியை அளித்திருக்கிறது" என முன்னாள் ஜனாதிபதி ஜானி ஜெயில்சிங் தெரிவித்துள்ளார்.

★ "ராஜீவ்காந்தியின் கொடிய சம்பவத்தை எப்படியாவது சகித்துக் கொண்டு தமிழக மக்கள் அமைதி காக்க வேண்டும்" என்று தமிழக ஆளுநர் பீ. எம். நாராயண சிங் தெரிவித்துள்ளார்.

★ "அன்னை இந்திராவுக்குப் பின்னர் நிர்க்கதியாக இருந்த இந்தியாவை ராஜீவ் வழிநடத்தினார் இப்போது வழி நடத்த யார் உள்ளனர்" என்று ஜி.கே.மூப்பனார் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

★ ராஜீவ் காந்தியின் மரணம் தனக்கு ஆழ்ந்த அதிர்ச்சியைத் தந்திருப்பதாக" தி.மு.க தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

★ "வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட கொடிய சோக நிகழ்ச்சியே ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது" என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வாஜ்பாய் தெரிவித்தார்.

# 'யங்றோயல்' சம்பியனாக தெரிவு

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட லீக் போட்டியில் யங்றோயல் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி மோதலில் அளவெட்டி இளைஞர் கழகமும் காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகமும் மோதியது. (ஈ)

# அறிமுகப் பரீட்சை பின்போடப்பட்டது

வட இலங்கைச் சங்கீதசபை நடத்தும் தரம் இரண்டு தொடக்கம் ஆறு வரையான அறிமுகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது என மேற்படி சபையின் தலைவர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அதாவது ஜூன் மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த இப் பரீட்சை 22 6 91 23 6 91 ஆகிய திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தரம் ஐந்து, ஆறுக்குரிய நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பரீட்சை, வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

# நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
இந்திய இராணுவத்துடனான மோதலில் 29-09-88 இல் வீரமரணம் அடைந்த மாவீரர் கப்டன் சில்வின் (முருகன் - ஜெயச்சந்திரன் தொண்டமானாறு), 3 ஆம் ஆண்டு நினைவு நாளை யொட்டியும், தொண்டமானாறு கலைமகள் சனசமூக நிலையத்தின் 13 ஆவது நிறைவையொட்டியும் நிலையத்தினரால் போட்டி நிகழ்ச்சிகளும் அஞ்சலிக்கூட்டமும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி 29-5-91 தொடக்கம் 2-6 91 வரையும் நிலைய விளையாட்டுப் போட்டிகள், 3.6 91 தொடக்கம் 5.6 91 வரையும் நடைபெறும். இறுதி நாளான 5-6-91 பிற்பகல் 4 மணிக்கு அஞ்சலிக்கூட்டமும் பரிசளிப்பு விழாவும் மேற்படி நிலைய மைதானத்தில் இடம் பெறவுள்ளது: இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

# கொலையை நேரில் பார்த்ததாக வாழப்பாடி தகவல்

(சென்னை)

ராஜீவ் காந்தியின் படுகொலையில் புலிகளே சம்பந்தப்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கருத்துத் தெரிவித்தார்.

நேற்றுச் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், இந்தக் கொலைச் சம்பவத்தைத் தான் பார்த்ததை எடுத்துரைத்தார்.

மேடைக்குப் பக்கத்தில் ராஜீவ் காந்தி காரில் இருந்து இறங்கி வரிசை வரிசையாக நின்றவர்களிடம் இருந்து மாலை மரியாதைகளை ஏற்றுக்கொண்ட போது, ஒரு பெண் உட்பட இருவர் கையில் மல்லிகைப் பூக்கூடையுடன் இருந்தார்கள் என்று குறிப்பிட்டார்.

எல்லோரும் வடக்குப் பக்கமாகத் திரும்பி நின்ற போது, இந்த இருவர் மட்டும் தெற்குப் பக்கமாகத் திரும்பி நின்றதாக அவர் தெரிவித்தார். இந்த இருவரும் மல்லிகை மலர்க்கொத்துக்களை ராஜீவிடம் வீசிய போது தான் குண்டுவெடிப்பு ஏற்பட்டது.

அந்தப் பெண்ணின் தலை அந்த இடத்திலேயே துண்டிக்கப்பட்டது. சடலங்கள் இரண்டும் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. ஆகையால் இது இலங்கைப் போராளிப் பெண்ணாக இருக்கலாம் என்றார் வாழப்பாடி.

தமிழகத்தில் ஒருசில கட்சிகள் அரசியல் எதிரிகளைத் தீர்த்துக்கட்டப் புலிகளைக் கூலிப்படைகளாக நடத்துகிறார்கள் என்றும், இந்தப் படுகொலைக்குப் பின்னால் சதி வலை பின்னப்படிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். தி.மு.க. ஆட்சியில் உருவெடுத்த துப்பாக்கிக் கலாசாரமே இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்குக் காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இலங்கைத் தமிழர்களை நம் மண்ணிலிருந்து அடியோடு அகற்றவேண்டும் என்று தான் குடியரசுத் தலைவரைக் கேட்கப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளிடமிருந்து தமக்குப் பல்வேறு மிரட்டல் கடிதங்கள் வந்ததாகக் குறிப்பிட்ட அவர்; இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்காது என்றார்.

இந்தப் பெண்ணின் பாவாடைக்குள் வெளிநாட்டுத் தயாரிப்பான ஒரு நவீன உடையும், அதற்குள் செருகப்பட்ட வெடிமருந்துக் கருவியும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக உறுதியளிக்கப்படாத வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப்பெண் விடுதலைப்புலிகள் தற்கொலைப் படையைச் சேர்ந்தவளாக இருக்கலாம் என்றும், தானே வைத்திருந்த வெடிகுண்டைத் தானே இயக்கியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

## 50 வயதுப் பெண்மணியே குண்டைக் கொடுத்தார்

(சென்னை)

ராஜீவ் காந்தி தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுவதற்காக காரில் இறங்கி வந்தபோது சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருவர் மலர்ச்செண்டு ஒன்றைக் கொடுத்ததாகவும், அதனுள்ளிருந்த குண்டு வெடித்ததில் திரு ராஜீவ் காந்தி, அப்பெண்மணி உட்பட சுமார் இருபதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது. தூரத்திலிருந்து இயங்கச் செய்யப்பட்ட இக்குண்டுவெடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. திரு ராஜீவ் காந்தியின் உடல் அடையாளம் காணமுடியாதளவுக்கு சிதறிப் போயிருந்ததாக கூறப்படுகிறது.

## கொலைபற்றி ஆராய விசாரணைக் கமிஷன்

(டில்லி)

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவிற்கு உதவும் வகையில் விசேட புலனாய்வுப் பிரிவு ஒன்று செயற்படும்.

ராஜீவ் காந்தியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஏழு நாட்கள் துக்கதினம் அனுட்டிக்கும்படி மத்திய அரசு அறிவித்துள்ளது. தேசிய கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்கவிடவும் கோரப்பட்டுள்ளது. தேசிய அளவில் துக்கம் கடைப்பிடிக்க சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. பல மாநில அரசுகளும் இதே போன்ற அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

அதேவேளை சிறீபெரும்புதூர் குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து ஆராய தமிழ்நாடு அரசு காவல்துறையினரையும் புலனாய்வுப் பகுதியினரையும் பணித்துள்ளது.

## கலிபோனியா அனைத்துலக தமிழீழ ஆய்வு மாநாடு

(கலிபோனியா)

அனைத்துலக தமிழீழ ஆய்வு மகாநாடு கலிபோர்னியாவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச தமிழர் இணையமும், கலிபோர்னியா அரச பல்கலைக் கழக அரசியல் துறையும் ஒருங்கிணைந்து நடத்தவிருக்கும் இம் மாநாடு எதிர்வரும் ஜூலை 20, 21-ஆம் திகதிகளில் கலிபோர்னியா அரச பல்கலைக் கழகத்தில் இடம்பெறும்.

ஆய்வு முறைசார்ந்த இந்த மாநாடு தமிழ ஈழத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தும் அகில உலகிலிருந்தும் தமிழ் அறிஞர்களும், மற்றும் தமிழரல்லாத அறிஞர்களும் இம் மாநாட்டில் கலந்துகொள்வார்கள்.

## மரண அறிவித்தல்

### திரு. தம்பிப்பிள்ளை வல்லிபுரம்

(இரத்தினம்)

(ஓய்வு பெற்ற காணி அபிவிருத்தி மேற்பார்வையாளர்)

திரு. தம்பிப்பிள்ளை வல்லிபுரம் காலமானார். இவர் நவமணியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரன் (நோர்வே) கணேஸ்வரன் (நோர்வே), மாலினி, லங்கேஸ்வரன் முகுந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (வியாழக்கிழமை) 4 மணி அளவில் கைதடி நுணாவில் மயானத்தில் நடைபெறும்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
கண்ணன் (மகன்)

(R/1406)

## டாங்கே மரணமானார்

(டில்லி)

இந்தியாவின் மூத்த கம்யூனிஸ்ட் தலைவரான எஸ். ஏ. டாங்கே நேற்று அதிகாலை பம்பாயில் மருத்துவமனை ஒன்றில் காலமானார். இறக்கும்போது அவரது வயது 91 ஆகும். இந்திய ராஷ்டிரபதி, உபராஷ்டிரபதி இவர் மரணம் தொடர்பாக இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளனர்.

காங்கிரஸ் புதிய

சோனியா காந்தியின் பெயரை முன்னாள் அமைச்சர் அஜித் சிங் முன்மொழிந்தார். திரு. பிரணாப் முகர்ஜி வழிமொழிந்தார். கூட்டத்திற்குச் சமுகமளித்த அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டதை அடுத்து சோனியா காந்தியின் பெயர் அறிவிக்கப்பட்டது.

ஆனால் இந்திரா காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை சோனியா காந்தி ஏற்றுக்கொள்வாரா என்பது சந்தேகத்திற்குரியதே என பி.பி.ஸி. தெரிவித்தது. இதேவேளை சோனியா காந்தி இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை பாரதீய ஜனதாக் கட்சி விமர்சித்துள்ளது.

சோனியா காந்தி கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை, இந்திரா காங்கிரஸ் கட்சியில் உடைவுகள் ஏற்படாமல் தடுப்பதற்கும், தேர்தலில் அனுதாப வாக்குகளைப் பெறுவதற்குமான ஒரு நடவடிக்கை என அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

இந்தியத் தேர்தல்

நடைபெறுவதாக இருந்த மறுவாக்குப் பதிவும் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

அதேவேளை ராஜீவ் போட்டியிட்ட அமேதி தொகுதியில் நிகழவிருந்த பத்து வாக்குச் சாவடிகளுக்கான மீள்வாக்குப் பதிவு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. அதேவேளை அத்தொகுதி வாக்குகள் எண்ணப்படும் என்றும் அதில் ராஜீவ் வெற்றி பெற்றால் இடைத் தேர்தல் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு வேட்பாளர் யாரும் வெற்றி பெற்றால் அவர் பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவார்.

## வடக்கு கிழக்கு மாகாணத்தினுள் சுவிஸ் பாணியிலான 'கன்ரன்' அமைப்புக்கள்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு இணைந்த மாகாணமும் அப் பிரதேசத்தில் முஸ்லிம், சிங்களவர்களுக்கென சுவிஸ் பாணியிலான 'கன்ரன்' பிரிவுகளாக அமைக்கும் யோசனை இருப்பதாக சிறிலங்காவின் நிதி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் அறிவித்துள்ளார்.

திட்டவரைபுக் குழுவினர் மத்தியில் ஏ.சி.எஸ். ஹமீட் இதனைத் தெரிவித்தார். இது இனப்பிரச்சினை தீர்வு யோசனையாக முன் வைக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## யாழ். குடாநாட்டில் புளொட் உறுப்பினர் கைது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். குடாநாட்டுக்குள் வந்ததாகக் கருதப்படும் புளொட் உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகளால் கடந்த ஞாயிறன்று கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது. இதனைத் தொடர்ந்து தகவல் கொடுப்பவர்கள் சிலரும் கைதுசெய்யப்பட்டதாக அறியப்படுகிறது. இதில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் உள்ளடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் பணிபுரிகின்ற அனைத்து அரச கூட்டுத்தாபன ஊழியர்களின் கலந்துரையாடல் நாளை வெள்ளி காலை பத்துமணியளவில் யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும். இதில் சகல ஊழியர்களும் கலந்துகொள்ளுமாறு மன்னார் அரச அதிபர் ஏ.சி. செபராயகம் வேண்டியுள்ளார்.

தீன்மூர்த்தி

அஞ்சலி செலுத்தினர். அவர்களுடன் கூடவே முக்கிய காங்கிரஸ் பிரமுகர்கள் பலரும் ராஜீவின் பூதவுடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தனர்.

அங்கிருந்து அகில இந்திய விஞ்ஞானக்கழக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் பின்னர் ராஜீவ் காந்தியின் இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ராஜீவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த அவரது இல்லத்திற்கு முன்பாக ஏராளமானோர் திரண்டனர். இதனால் வீட்டின் ஜன்னல்கள் கதவுகள் என்பன சிதையுண்டன.

இதன் பின்னர் தீன்மூர்த்தி பவனுக்கு ராஜீவ் காந்தியின் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது. தீன்மூர்த்தி பவன் இல்லம் புதுடில்லியிலுள்ள ஜவகர்லால் நேருவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமாக விளங்கியது. தற்போது அரசினால் நேருநினைவாலயமாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அங்கு ஜனாதிபதி வெங்கட்ராமன் தமது மனைவியுடன் சென்று அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் சந்திரசேகர், துணைப்பிரதமர் தேவிலால் உட்பட இராணுவத்தளபதிகள் உயர் அரச அதிகாரிகள் காங்கிரஸ் பிரமுகர்கள், அமைச்சர்கள், அரசியல் கட்சித்தலைவர்கள் உட்படப் பலர் அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மூவர்ணக் கொடியால் போர்த்தப்பட்ட பூதவுடலுக்கு சமீபமாக ராஜீவின் மனைவி சோனியா காந்தி மகள் பிரியங்கா மற்றும் மேனகா காந்தி உட்பட பல குடும்ப உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர் ராஜீவின் மகன் ராகுல் காந்தி இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவிலிருந்து இன்று புதுடில்லிக்கு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ராஜீவின்

நிறுவனத்திற்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்ட சுபோதகான் சகாய் இதுவரை திட்டவட்டமான சான்றுகள் கிடைக்கவில்லையென்றாலும் குண்டுவெடித்திருப்பதைப் பார்த்தால் அது விடுதலைப் புலிகளின் வேலையாக இருந்திருக்கலாம் எனக் கூறினார்.

## தென்கொரிய பிரதம மந்திரி பதவி ராஜினாமா

(சியோல்)

தென்கொரிய பிரதமமந்திரி நேற்று தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்; கடந்த இருவாரகாலமாக அரசாங்கத்திற்கு எதிராக நடந்த ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இங்கு பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பொலிசாரால் அடித்துக் கொலைசெய்யப்பட்டது தெரிந்ததே.

ஆங்கில

பரீட்சை மூலம் சுமார் 3000 பேர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தியாவில்

தெரிவிக்கின்றன.

பஞ்சாப் அரியானா, இமாலயப் பிரதேசம், சண்டிகார் பகுதிகளில் இயல்பு வாழ்க்கை அநேகமாக உடைந்து போய்விட்டது தமிழ்நாட்டில் மூன்று பேரும், கேரளத்தில் ஒருவரும், கொல்லப்பட்டுள்ளனர். மத்திய பிரதேசம், ஒரிசா, குஜராத் மேற்கு வங்காளம் மற்றும் திருபுரவில் ஆங்காங்கு சில வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்திருப்பதாகத் தெரியவருகிறது. பீகார், உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் பொலிசாரின் ரோந்துப் பணி பலப்படுத்தப்பட்டுள்ளது.

ராஜீவுடன் மேலும்

தொன்பது பேரில் சிலரின் விபரம் வருமாறு: முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி மரகதம் சந்திரசேகர் ஐக்கிய பொதுவுடமைக் கட்சிப் பிரமுகர் தா. பாண்டியன் காவற்றுறை துணை இன்ஸ்பெக்டர் ஜே. பி. மாசதூஸ் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. நாஞ்சில் குமரன்.

கட்டுப்படுத்த

கொண்ட படைப்பிரிவு புதுடில்லியில் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதனிடையிற் பாக்கு நீரிணையில் சிறிலங்காகடற்படை ரோந்து பலப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிவாரணம்

யாழ் கில்னர் மண்டபத்தில் வைத்து நாளை வெள்ளிக்கிழமை காலை இவை வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.